**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.129/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | சந்தியா |
| Father's Name/Husband Name: | வேல்முருகன் |
| Village : | கிலியப்பட்டு |
| Taluk : | குன்னம் |
| Age : | 38/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 24.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி சகுந்தலா ஆஜர் இல்லை. )**

**முதல் விசாரணை**

நான் கிலியப்பட்டு கிராமத்தில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். எனக்கும் எதிரிக்கும் பாதை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. 2017ம் வருடம் காலை 09.00 மணியளவில் நான் எதிரியின் காடு வழியாக தான் எங்கள் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்பதால் நான் அந்த பாதையில் போய் கொண்டிருந்தேன். அப்போது எதிரி அந்த பாதையில் வரக்கூடாது என்று அசிங்கமாக என்னை பேசினார். நான் கேட்டதற்கு என்னை அடுப்பில் எரிந்து கொண்டிருந்த விறகை எடுத்து என்னுடைய இடது பக்க தலையில் அடித்தார்.

அதன் பிறகு அரியலூர் மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டேன். இது குறித்து போலிசில் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கும் எதிரி சகுந்தலாவிற்கும் என்ன உறவு முறை என்றால் எனது மாமியார் முறை. மருத்துவமனையில் நான் புற நோயாளியாக சிகிச்சை பெற்றுவிட்டு உடனே வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் கையொப்பம் மட்டும் தான் போட்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி சகுந்தலா என்னை அடிக்கவில்லை என்றால் சரிதான். புகாரில் கூறியுள்ளது போல் எதிரி எனக்கு எதிராக எந்த குற்றச்செயலும் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு எதிராக நான் பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.